பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 20 | வெள்ளிக்கிழமை | 03.05.2024 | அதிர்வு 276

## அச்சுவேலியில் 2 வீடுகள் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்

### மூவர் பொலிஸாரால் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பகுதியில் இரண்டு வீடுகள் மீது வன்முறைக் கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவம் 06

# மோசமான ஆட்சிக்கு முடிவு கட்டி மக்கள் சார் அரசை நிறுவுவோம்

## நோர்வே தூதுவரிடம் சஜித் திட்டவட்டம்



இலங்கைக்கான நோர்வே தூதுவர் திருமதி மே எலின் ஸ்டெனருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஜோன் பிஜேர்கெமும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர். 06

## அநுரகுமாரவையும் நேரில் சந்தித்த நோர்வே தூதுவர்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் மே எலின் ஸ்டெனருக்கும் இடையிலான சந்திப்பு ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இந்தச்சந்திப்பில்நோர்வேதூதரகத்தின் இரண்டாவது செயலாளரான ஜோன் பிஜேர்கெம், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான 06

## சுன்னாகத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம்

### மரணத்தில் சந்தேகம்



யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கப்பப்புலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவர் 06

## கணவன் வெட்டிப் படுகொலை! மனைவி நஞ்சருந்தி தற்கொலை!!

### நெடுங்கேணியில் துயரம்



வவுனியா, நெடுங்கேணி – கிரிசுட்டான் பகுதியில் வீடு ஒன்றில் நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் வசித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடையவேதநாயகம் லோகநாதன் என்பவரே வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, 06



விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்ற பேச்சுக்களின் போது அனுசரணைப் பணி வகித்த நாடு நோர்வே.

ரணிலின் அரசின் காலத்தில் நான்கு நாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள், பின்னர் மஹிந்தர் காலத்தில் ஜெனிவாவில் இரண்டு சுற்று பேச்சுக்கள் என்று சமரச முயற்சிகளில் அங்கங்கு பெரும் செலவில் பேச்சுகளை ஒழுங்குபடுத்திய நோர்வே இப்போது கொழும்பில் அதன் தூதரகத்தையே மூடிவிட்டது. புதுடில்லியில் இருக்கும் நோர்வேத் தூதரகமே அங்கிருந்தபடி இலங்கை விடயங்களையும் கையாளுகின்றது.

நோர்வேயின் இந்தியாவுக்கான 06

## பழைய மாணவர்கள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வைகாசி மாதம் 4ம் திகதி (04-May-2024) கொழும்பு புனித மேரி தேவாலயத்தில் மாலை 6.00 மணிக்கு பூசையும் அதனைத் தொடர்ந்து கொழும்பு Marino Beach ஹோட்டலில் (கொள்ளுப்பிட்டி) வருடாந்த பொதுக் கூட்டமும், இரவு விருந்து உபசாரமும் இடம்பெறும்.

**பழைய மாணவர்கள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.**

## போதைப்பொருள் பாவனைக்காக விபசாரத்தில் ஈடுபட்ட 25 பெண்கள்



போதைப்பொருள் பாவனைக்காக விபசாரத்தில் ஈடுபட்ட பெண்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களில் 25 பேர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பத. வைத்திய பரிசோதனையில் தெரியவந்துள்ளது .

பேலியகொடைபொலிஸ்பிரிவில்மேற்கொள்ளப்பட்ட"யுக்திய" நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த 25 பெண்களும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது .

இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போது இவர்கள் கொனோரியா, ஹெர்பெஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது .

சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்திய கண்காணிப்பின் கீழ் அவர்களுக்கு சிகிச்சை அளித்து மறுவாழ்வு வழங்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், இந்த பெண்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் வைத்திய பரிசோதனைகளை செய்து கொள்ளுமாறு பேலிய கொடை பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

# மரண அறிவித்தல்

## மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன்

## (மா.க.ஈழவேந்தன்)



யாழ்.கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் (மா.க.ஈழவேந்தன்) 28.04. 2024 அன்று ரொரன்ரோவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் கனகசபாபதி – சிவயோகம் இணையரின் அன்பு மகனும் அருளாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் யாழினி (தமிழ்நாடு), எழிலினி (தமிழ்நாடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரசேந்திரன் (தமிழ்நாடு), சம்பத்குமார் (தமிழ் நாடு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற யோகேந்திரன், ,ந்திராணி மற்றும் பாலேந்திரா (கொழும்பு), விஜயேந்திரராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவானந்தன் (ஈழநாடு) மற்றும் சண்முகசாமி (கொழும்பு, ,லங்கை மத்திய வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகேஷ், நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் புனிதவதி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு அத்தானும் இளங்கோ, சேரன், மோகன், தயாளன் ஆகியோரின் பெரியப்பாவும் பாலக்கண்ணன், பாலமுரளி, மீரா, யசோதை, இராதை, ஆரூரன், குமரன், கோகிலா ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் இரா.உத்தமசோழன், மருத்துவர் இரா.தமிழ்க்காவிரி, தமிழழகன், பொழிலன் ஆகியோரின் பாட்டனாரும், திகழ்மாறனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ,றுதி வணக்க நிகழ்வு விபரம்: பார்வைக்கு: **Ajax Crematorium & Visitation Center, 384 Finley Ave, Ajax, Ontario, L1S 2E3.**

04 /05/2024, சனிக்கிழமை மாலை 5.00 – இரவு 9.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 05/05/2024 ஞாயிறுக்கிழமை மதியம் 12.00 – மாலை 4.00 வரைஇறுதி நிகழ்வும் தகனமும் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு: **கண்ணன்** – 647-657-8566, **விஜிதரன்** – 647-783-3466,
**திரு.சிறி** – 416-893-9545

**குறிப்பு :** மாமனிதர் ஈழவேந்தன் அவர்கட்கு அனைத்து தேசிய மரியாதையுடன் இறுதி வணக்க நிகழ்வு சனிக்கிழமை அன்று நடைபெறும். இதில் அனைத்து தமிழ் மாந்தர்களும் வேற்றுமைகள் களைந்து ஒன்றுபட்டு விடை கொடுத்து வணக்கம் செலுத்த வேண்டப்படுகின்றீர்கள்.

**குறிப்பு :** நினைவுரை ஆற்றவிரும்புவோர் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ஈழம் வெல்லும். அதைக் காலம் சொல்லும்.**




# காங்கேசன் – நாகைப்பட்டினம் இடையே தினசரி பயணிகள் கப்பல் சேவை 13 ஆம் திகதி ஆரம்பம்

## ‘இந்த்சிறி’ நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவையை எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்த்சிறி பயணிகள் படகுச் சேவை தனியார் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

40 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியா – இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் நாகப்பட்டினம் – காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

எனினும், இந்த சேவையைத் தொடர்வதில் இயற்கையான தொழில்நுட்ப விடயங்கள் சில தடைகளாக அமைந்திருந்தன. இந்நிலையில் தற்போது இந்த்சிறி பயணிகள் படகுசேவை தனியார் நிறுவனம் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் மீளவும் கப்பல்சேவை ஆரம்பித்து தொடரவுள்ளது.

அந்த வகையில் மீளவும் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்துக்கும், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கும் மனமார்ந்த நன்றிகளை இந்த்சிறி பயணிகள் படகுசேவை தனியார் நிறுவனம் தெரிவித்துக் கொள்கின்றது.

நாகப்பட்டினத்துக்கும், காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் சேவைக்காக “சிவகங்கை” எனும் கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது. 150 பயணிகள் பயணிப்பதற்கான வசதிகளை கொண்ட இந்த கப்பலில் பயணிப்பதற்கு இருவழி கட்டணமாக வரிகள் உள்ளடக்கப்பட்டு 34,200ரூபாவை (8,400இந்திய ரூபா) அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கப்பலில் பயணிக்கும் பயணியொருவர் 60 கிலோகிராம் எடையுடைய பொருள்களை எடுத்துச்செல்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. எவ்வாறாயும், பொதியொன்றின் எடை 20 கிலோகிராமுக்கு உட்பட்டதாக அமைய வேண்டியது வரையறுக்கப்பட்ட விடயமாக உள்ளது.

இதேவேளை, கப்பலின் மேற்தளத்தில் கடற்பரப்பினை பார்த்து இரசித்துச் செல்லும் வகையில் பிரேமியர் ஆசன ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இது விசேட அதிதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை மையப்படுத்தியதாகும்.

அதற்காக விசேட கட்டணமும் அறவிடப்படவுள்ளதோடு பயணி ஒருவரின் எடையிலும் மாற்றங்கள் காணப்படும்.

மேலும், இந்தப் படகுசேவையானது காலம் தாழ்த்தப்பட்டமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், உண்மையில் நாகப்பட்டினத் துறைமுகத்தினைப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தொகையை பயணிகளிடத்திலிருந்து அறவிடுவதற்கு தமிழக அரசாங்கம் முன்மொழிந்திருந்தது.

எனினும் அத்தொகையை பயணிகளின் பயணத்தொகையுடன் இணைக்கின்றபோது அது மேலும் அதிகரிப்பதற்கான நிலைமைகளே காணப்பட்டன. இதனால் இந்த விடயம் இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அவதானிப்புக்களுக்கு அமைவாக நாகைப்பட்டின துறைமுகப் பயன்பாட்டுக் கட்டணத்தை மத்திய அரசாங்கம் மானியமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் மாதந்தோறும் 72 லட்சம் ரூபா (இந்தியப் பணத்தில்) துறைமுகப் பயன்பாட்டுக்கட்டணமாக மத்திய அரசாங்கம் 12மாதங்களுக்கு தமிழக அரசாங்கத்துக்கு வழங்கவுள்ளது. அந்த வகையில் மத்திய அரசாங்கத்தின் மேற்படி செயற்பாட்டின் காரணத்தினாலேயே தற்போது கப்பல் சேவை சாத்தியமாகியுள்ளது.

அதற்கு மத்திய அரசாங்கத்துக்கு விசேடமாக எமது நிறுவனம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. – என்றார்.







# ‘சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணி’ அந்தஸ்து சட்டவாதிகள் 5 பேருக்கு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக சிரேஷ்ட சட்டவாதிகள் ஐவருக்கு ‘சிரேஷ்ட அறிவுறுத்தல் சட்டத்தரணி” (Senior Instructing Attorneys-at-Law) அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், டி.எம். சுவாமிநாதன், ஜி.ஜி. அருள்பிரகாசம், எச்.ஆர்.ஏ.டி.பி. குணதில மற்றும் எஸ்.என்.எம். குணவர்தன உள்ளிட்டோருக்கே இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

சட்டத் தொழிலில் சிறந்து விளங்குகின்றமை மற்றும் உயர்வான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் அறிவுறுத்தல் சட்டத்தரணிகள் ஆற்றும் சிறப்பான சேவையைப் பாராட்டும் வகையில், 2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் மேற்படி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.











பேராசிரியர் சு.வித்தியானந்தன்
நூற்றாண்டு விழா
காலம் : 11.05.2024, 12.05.2024
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




# யாழ் கோட்டையை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றால் போல மேம்படுத்த ஆளுநர் பணிப்பு

யாழ் நகரின் முக்கிய சுற்றுலாத் தலமாக காணப்படும் கோட்டையை, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்றால் போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

யாழ் கோட்டையின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சூழலை, சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் அழகுபடுத்தத் தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றை இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும், அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

வரலாற்றுச் சின்னமாக காணப்படும் கோட்டையைப் பாதுகாப்பதற்கும், அதனூடாக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் புதிய திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய சுற்றுலா இடங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை தொல்பொருள் திணைக்களமும், மத்திய கலாசார நிதியமும் மாகாண சபையுடன் இணைந்து செயற்படும் போது, அதற்கான ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என ஆளுநர் கூறினார்.

ஆளுநரின் பணிப்புரைகளை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், பணிப்புரையை துரிதமாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவித்தனர்.

# கல்மெடியாவ பகுதியில் விபசார விடுதி முற்றுகை

## இரு பெண்கள் உட்பட மூவர் கைது

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு கல்மெடியாவ பகுதியில் விபசார விடுதியொன்றை நடாத்தி வந்த ஆண் ஒருவரையும் இரண்டு பெண்களையும் நேற்று மாலை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் – கல்மெடியாவ பகுதியில் தேநீர் கடையொன்றை நடத்தி வருவதைப் போன்று விபசார விடுதி நடத்தப்பட்டு வருவதாகப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அந்தத் தேநீர் கடையைச் சோதனையிட்ட போது தேநீர் கடைக்கு பின்னால் அறையொன்றில் தங்கியிருந்த இரண்டு பெண்களைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கண்டி மற்றும் ரத்னபுர பகுதிகளைச் சேர்ந்த 35 வயது உடையவர்கள் எனவும் தெரிய வருகின்றது.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்படுத்த தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதுவர் திருமதி மே எலின் ஸ்ரெனர் மற்றும் இரண்டாவது செயலாளர் ஜொஹான் பெர்ஜ்கம் ஆகியோர் கொழும்பு வந்துள்ளனர் – இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதற்காக.

இருவருமே ஜனாதிபதி தேர்தலின் மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் தனித்தனியாக விருந்துண்டு சந்தித்து விரிவாக உரையாடி உள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க மூவரையும் சந்தித்த அவர்கள், மூன்று பேருமே தத்தமது வெற்றி உறுதி என்று மிகத் திடமாக நம்புகின்றனர் எனக் கூறுகின்றனர்.

நோர்வே தூதுவரும் செயலாளரும், திங்களன்று யாழ் வருகின்றார்கள். இங்குள்ள பலரையும் சந்திக்க இருக்கின்றார்கள்.

ஜனாதிபதி தேர்தல் போட்டியாளர்கள் மூன்று பேருமே தத்தமது வெற்றி குறித்து அதீத நம்பிக்கையில் இருக்கின்றார்கள். அது கடும் போட்டி நிலவுகின்றது என்பதன் எடுத்துக்காட்டு. இந்தப் போட்டியை சிறுபான்மை இனத்தவர்கள் தங்களுக்குச் சாதகமாக – தந்ரோபாயமாக – புத்திசாலித்தனமாக – பயன்படுத்த வேண்டும் என்பது நோர்வேப் பிரதிநிதி உட்பட மேற்குலகத்தவர்களின் எதிர்பார்ப்பு.

ஆனால், தமிழர்களாகிய எங்கள் பக்கத்தில் குறிப்பிடத்தக்க தலைவர்கள் பொது வேட்பாளர் என்ற காய் நகர்த்தலில் இந்தச் சந்தர்ப்பத்தை நிராகரிக்க போகின்றார்கள் என்பதை தமது யாழ். விஜயத்தில் அவர்கள் உணரும்போது, எங்களின் அரசியல் மேதாவித்தனத்தை கண்டு திகைத்துத்தான் போவார்கள் என்பது நிச்சயம். இருந்து பாருங்கள்...!

## கணவன் வெட்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி நபரின் மனைவியான 37 வயதுடைய லோகநாதன் பரமேஸ்வரி என்பவர் அயலில் உள்ள வீட்டில் இருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் நஞ்சருந்தி தற்கொலை செய்திருக்கலாம் எனவும், அண்மைக்காலமாக கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்ந்து வந்திருந்தனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இருவரின் சடலங்களும் வவுனியா பொது வைத்தியசலைக்குக் கொண்டுவரப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அச்சுவேலியில் 2 வீடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக இரு சகோதரர்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

அச்சுவேலி – சங்கானை வீதியில் தென் மூலைப் பகுதியில் நேற்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெற்றோல் குண்டுகள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுரகுமாரவையும் நேரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலாநிதி ஹறினி அமரசூரிய, விஜித ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இதன்போது, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பிலும், அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

நோர்வே அரசால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்தலின் அவசியம் தொடர்பிலும் பேசப்பட்டன.

## மோசமான ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்தும் அதிலிருந்து மீள்வது குறித்தும் நோர்வேத் தூதுவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரியப்படுத்தியதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

இந்த ஆண்டு இந்நாட்டின் அரசியலில் ஒரு முக்கியமான ஆண்டு என்றும், முக்கியமான தேர்தல் நடைபெறும் என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், தற்போதைய படுமோசமான ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்றும், மக்கள் சார் அரசு ஸ்தாபிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதன்பின்னர், நாட்டை மீண்டும் வழமை நிலைமைக்குக் கொண்டுவர ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்பது குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, எரான் விக்கிரம ரத்ன மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.







## சுன்னாகத்தில் தூக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த சிறீவரதன் சஞ்சிதன் (வயது 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு குறித்த விலாசத்தில் உள்ள அவரது காதலியின் வீட்டுக்குச் சென்று அங்கு உறங்கினார் எனவும், பின்னர் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மரணம் குறித்து சந்தேகம் இருக்கின்றது என்று இளைஞரின் உறவினர்கள் சந்தேகம்வெளியிட்டுள்ளனர். அந்தவகையில் சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சடலம் மீதான உடற்கூற்று பரிசோதனை இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் இடமளியோம்!

## இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவிப்பு

"மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது."

– இவ்வாறு பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே லொஹான் ரத்வத்தே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விவசாயத்துறை சார் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்றன. இதன்படி தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் உட்பட சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட அனைத்துவித விவசாய உற்பத்திகளும் இந்த அமைச்சின் கீழ் உள்ளன.

அதேபோன்று இந்நாட்டில் 10 பாரிய அணைகள் இருக்கின்றன. அவை இந்நாட்டு நீர்மின்சார உற்பத்திக்கும் நீர்ப்பாசனத்திற்கும் பாரிய அளவில் பங்களிக்கின்றன. எனவே இந்த இரு அமைச்சுக்களையும் நாம் முறையான வகையில் செயற்படுத்துவதுடன், நவீன விவசாய பொறிமுறைகளுடன் கூடிய அடித்தளத்தை இடுவோமாயின் எதிர்காலத்தில் எமது நாட்டை தன்னிறைவு அடையச் செய்ய முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

அதற்காக தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் விவசாய அமைச்சும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன் மூலம் இவற்றின் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக முன்னெடுக்க தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று விவசாய நடவடிக்கையுடன் தொடர்புடைய மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான அமைச்சும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.



தற்போது இவற்றின் செயற்பாடுகளை செயற்திறன்மிக்க வகையில் முன்னெடுக்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

ஒரு சில இடங்களில் கைவிடப்பட்டுள்ள சுற்றுலா பங்களாக்களை புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகவும் அழகான சுமார் 30 பங்களாக்களும் உள்ளன. அத்துடன், மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன. உறுமய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இணையாக மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் அடிப்படையில் காணி உரிமைகள் இல்லாத மக்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிகளை வழங்கும் உறுமய வேலைத் திட்டம் மிக முக்கியமான வேலைத்திட்டம் என்பதைக் கூற வேண்டும். இதன் கீழ், சுமார் 25,000 காணி உறுதிகள் வழங்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் மேலும் 6000 பேருக்கு இந்த வார இறுதியில் காணி உறுதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் சட்ட விரோத செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது." – என்றார்.

# வாகன இறக்குமதித் தடையை நீக்குவது மிகக் கவனமாகச் செய்யப்பட வேண்டும்

## மோட்டார் வர்த்தகர்கள் சங்க மாநாட்டில் வலியுறுத்து



வாகனங்கள் மீதான இறக்குமதித் தடையை நீக்குவது மிகவும் கவனமாகவும் முறையாகவும் செய்யப்பட வேண்டும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் தலைமை நிர்வாகி பிங்குமல் தேவரதந்திரி கூறினார்.

2024ஆம் ஆண்டுக்குள் வாகன இறக்குமதி தடையை இலங்கையால் நீக்க முடியுமா என்பது தொடர்பில் இலங்கை மோட்டார் வர்த்தகர்கள் சங்கம் நடத்திய 'இயக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி' என்ற மாநாட்டில் உரையாற்றிய சர்வதேச பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு கருத்து வெளியிட்ட பிங்குமல் தேவரதந்திரி –

"வாகன இறக்குமதி தடை நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் அமெரிக்க டொலரின் மதிப்பு மீண்டும் உயரும். இந்த தீர்மானமானது நாட்டின் வெளிநாட்டு நாணயத்தையும் வெளியில் கொண்டுசெல்ல வழிவகுக்கும்.

எனவே, இதைச் செய்வதற்கான சிறந்த வழி, கடன் மறுசீரமைப்பு செயல்முறை முடிவடையும் வரை காத்திருக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணைக் கடன் பெறப்பட்டதன் பின்னரே இத்தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணை கடனை பெறுவதில் அரசாங்கம் சரியான பாதையில் பயணிக்கிறது.

ஒவ்வொரு மாதமும் சுமார் 100 முதல் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கையிருப்பில் சேர்க்கப்படுவதை நாங்கள் காண்கிறோம். இந்தப் போக்குத் தொடர்ந்தால், இலங்கையின் கையிருப்பு 6 பில்லியன் டொலரை எட்டும் போது வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும்." என்றார்.

இதற்கிடையில், ஜப்பானிய தூதரகத்தின் பிரதித் தூதுவர் கட்சுகி கோட்டாரோ கூறுகையில்,

"முதலில் நு (இலத்திரனியல்) வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பது அவசரம் என்றாலும், அதற்கான உள் கட்டமைப்பு இலங்கையிடம் இல்லை.

நான் ஒரு முன்னணி விலையுயர்ந்த அடுக்குமாடி குடியிருப்பில் தங்கியிருக்கிறேன். ஆனால், எனது நு வாகனத்திற்கு தினசரி சார்ஜிங் செய்வதற்கான சந்தர்ப்பம் அங்கு இல்லை.

எனவே, அரசாங்கத்திற்கு நான் பரிந்துரைப்பது என்னவென்றால், முதலில் ஹைப்ரிட் கார்களை 2030 ஆம் ஆண்டு வரை அனுமதிக்க வேண்டும்.

அதன் பின்னர் நு வாகனங்களை முழுமையாக இறக்குமதி அனுமதிக்க வேண்டும். இது இலங்கை முழுவதிலும் ஒரு நல்ல நு சார்ஜிங் கட்டமைப்பைப் பெறுவதற்குப் போதுமான கால அவகாசத்தை வழங்கும்.

ஜப்பான் இதை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு வருவதாகவும், 2025 ஆம் ஆண்டில் முழுமையாக ஜப்பானில் நு வாகனங்களே இருக்கும்." என்றும் பிரதித் தூதுவர் கட்சுகி கோட்டாரோ கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சூடு பிடிக்காத மே தினம்

மே தினத் திருவிழாக்கள் எல்லாம் முடிந்து விட்டன.

இது தேர்தல் ஆண்டு என்பதால் இம் முறை மே தினத் திருவிழா பெரும் ஆர வாரமாக இருக்கும், கட்சிகள் எல்லாம் தத்தமது புஜபல பராக்கிரமத்தை காட் டுவதற்காக மே தினத்தை எடுப்பாக நடத்தி அட்டகாசம் பண்ணும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அப்படி ஒன்றும் எதிர்பார்க்கப் பட்ட விடயங்கள் பெரிதாக நடக்கவே இல்லை என்பதுதான் வித்தியாசமான நிலைமையாகும்.

தேர்தல் ஆண்டோ, இல்லையோ வழமையாகவே மே தினம் என்றால் ஜே.வி.பி. பெரிய எடுப்புக் காட்டும். ஆரவாரம் பண்ணும். ஜனக் கூட்டத்தைத் திரட்டி, பார்ப்போரை மூக்கில் விரலை வைக்கப் பண்ணும். இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிக்கனி கிட்டினாலும் கிட்டும் என்ற எதிர்பார்ப்பில் இருப்ப தால் ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி இந்த முறையும் வழமை போல ஆள்களைத் திரட்டி ஜனசமுத்தி ரம் காட்டியது.

அது தவிர, மற்ற எந்தக் கட்சியின தும் மே தின நிகழ்வும் அப்படி ஒன்றும் பெரும் பரபரப்பு ஏற்படுத்தவில்லை. எதிர்பார்த்ததை போன்று பெரிய அள வில் கூட்டங்கள் அலை மோதவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்து சுருங்கி கிடந்த ஐக்கிய தேசி யக் கட்சிக்கு இப்போது ஜனாதிபதி பதவி கிடைத்தமையால் அதன் மே தின கூட்டத்தில் சற்று சுறுசுறுப்புத் தென் பட்டது. ஆயினும் பெரும் எழுச்சி எது வும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னோட்ட மாக ஐக்கிய தேசியக் கட்சியின் மே தி னக் கூட்ட மேடையில் புதிய அரசி யல் முகங்கள் பல வந்து இணையும், பெரிய மாற்றம் தெரியும் என்றெல்லாம் மே தினத்துக்கு முந்திய வாரங்களில் பர பரப்பாக செய்திகள் அடிபட்டன. ஆனால் அப்படி ஒன்றும் புதிதாக நடக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடை நடுவில் அதிர்ஷ்டமாகக் கிடைத்த ஜனாதிபதி பதவியை அடுத்து எதிர் அணியில் இருந்து இதோ பிரமுகர் கள் வருகின்றார்கள், அதோ பல எம். பிக்கள் ரணில் பக்கத்துக்கு பல்டி அடிக்கின்றார்கள் என்றெல்லாம் அவ்வப்போது செய்திகள் வெளியா கிக் கொண்டிருந்தன. உச்சமாக அது இந்த மே தினத்தில் நடக்கும் என்றும் செய்திகள் பரபரப்பாக பேசப்பட்டன.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை என்பதுதான் யதார்த்த நிலைமை.

தமது சொந்த வேட்பாளரை இந்த ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கும் ஈடுபாடு இல்லாத காரணத்தினாலோ என்னவோ மொட்டுக் கட்சியின் மே தினக் கூட்டம் கூட அவ்வளவு தூரம் எடுப்பாகப் பிரகாசிக்கவில்லை.

ஆயினும், குழம்பிப் போயிருக்கும் சுதந்திரக் கட்சியின் மைத்திரி பிரிவு மட்டும், நலிவுக்கு மத்தியிலும் ஏதோ தாங்களும் அரசியல் களப்போட்டியில் சூடாக நிற்கின்றோம் என்பதைக் காட்டும் வகையில் அளவோடு கம் பஹாவில் ஒரு மே தின நிகழ்வை நடத்தி முடித்து இருக்கின்றது.

மைத்திரிபால சிறிசேன, நீதி அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ போன் றோருக்கு சு.கவின் பதவி நிலை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ள போதிலும், அவர்கள் இருவர் உட்பட அவர்களின் ஆதரவாளர்கள் எல்லோருமே கூடி, மே தின ஆரவாரங்களை முன்னெடுத்த மையும், தங்களின் ஜனாதிபதி வேட்பாளரும் கட்சியைத் தலைமை தாங்கி வழிநடத்தப் போகின்ற தலை வரும் விஜயதாஸ ராஜபக்ஷதான் என்று மே தின மேடையில் அறிவித்த மையும் முக்கிய விவகாரங்கள்தாம்.

இன்னும் 138 முதல் 168 நாள்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்து விடும். ஆனால் அதற்கான ஆரம்பக் கட்ட ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள் கூட இந்த மே தினத்தில் எதிரொலிக்க வில்லை என்பது தேர்தல் இன்னும் சூடு பிடிக்கவில்லை என்னும் நிலைப் பாட்டின் பிரதிபலிப்புதான்.

# ராகுல் காந்தியை இந்தியாவின் பிரதமராக்க பாகிஸ்தான் தலைவர்கள் விரும்புகின்றனர்



பிரதமர் மோடி விமர்சனம்

"பாகிஸ்தான் தலைவர்கள் காங்கிரஸின் இளவரசரை இந்தியாவின் பிரதமராக்க விரும்புகிறார்கள்."

– இவ்வாறு ராகுல் காந்தி தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர் சவுதரி ஃபவத் ஹுசைன், ராகுல் காந்தியை பாராட்டி பேசிய சில நாட்களுக்கு பின்னர் பிரதமர் மோடி இந்த விமர்சனத்தை வைத்துள்ளார்.

குஜராத் மாநிலம் ஆனந்த் என்ற இடத்தில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மோடி,

காங்கிரஸ் கட்சி இங்கே வீழ்ச்சி அடைந்து வருகிறது. பாகிஸ்தானியர்கள் அங்கே அழுகிறார்கள். காங்கிரஸின் இளவரசரை (ராகுல் காந்தி) இந்தியாவின் பிரதமராக்க பாகிஸ்தான் தலைவர்கள் விரும்புகிறார்கள். காங்கிரஸ் கட்சி பாகிஸ்தானை பின்பற்றுவதாக இருந்தது.

காங்கிரஸ் கட்சியின் இளவரசர் அரசியல் சாசனத்தை தனது தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறார். ஆனால் கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் அரசியல்சாசனம் ஒரே மாதிரி செயல்படுத்தப்படவில்லை. காஷ்மீருக்கு அரசியல் சாசனம் பொருந்தாது. அங்கு சட்டப் பிரிவு 370, சுவர் போல தடையாக இருந்தது. நாங்கள் அதனைத் தகர்த்தோம்.

நாடு 60 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஆட்சியின் கீழ் இருந்தது. பா.ஜ.கவின் சேவைக் காலம் 10 ஆண்டுகளே. காங்கிரஸ் கட்சியின் 60 ஆண்டு கால ஆட்சியில், 60 சதவீத கிராம மக்களுக்கு கழிப்பறை வசதி கிடைக்கவில்லை.

பா.ஜ.க. 10 ஆண்டு கால ஆட்சியில் அதனைச் சாதித்தது. கடந்த பத்து ஆண்டுகளில் நாங்கள் 14 கோடி வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கியிருக்கிறோம். காங்கிரஸின் 60 ஆண்டுகால ஆட்சியில் 3 கோடி பேருக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டிருந்தது.

நான் காங்கிரஸ் கட்சிக்கு சவால் விடுகிறேன், மதத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை வழங்கும் வகையில் அரசியல் சாசனத்தை மாற்ற மாட்டோம் என்று எழுத்துப்பூர்வமாக எழுதிக் கொடுக்க அவர்கள் தயாரா?

நான் பல ஆண்டுகளாக குஜராத்துக்காக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2014 ஆம் ஆண்டு நாட்டுக்கு சேவை செய்ய என்னை நீங்கள் அனுப்பி வைத்தீர்கள். குஜராத்தில் நான் வேலை செய்த போது, நம்மிடம், குஜராத்தின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி என்ற மந்திரம் இருந்தது. எனக்கு ஒரே ஒரு கனவு தான் இருக்கிறது. வரும் 2047 இல் இந்திய சுதந்திரத்தின் 100 ஆவது ஆண்டைக் கொண்டாடும் போது நாடு விக்சித் பாரதமாக இருக்க வேண்டும். 2047 இற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்க உழைப்பேன். இது எனது உத்திரவாதம்." – என்றார்.

# பின்னணிப் பாடகி உமா ரமணன் உடல்நலக் குறைவால் காலமானார்



பிரபல பின்னணிப் பாடகி உமா ரமணன் உடல்நலக் குறைவால் தமது 69 ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

பிரபலபாடகிஉமாரமணன்,சென்னை – அடையாரில் அவரது கணவருடன் வாழ்ந்து வந்துள்ளார்.

அவர் 6 ஆயிரத்துக்கும் அதிகமான மேடைநிகழ்வுகளில்பாடியுள்ளார்.35வருடங்களுக்கு அதிகமான காலம் இசைத் துறையில் பயணித்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு வெளியான "நிழல்கள்" திரைப்படத்தில் இடம்பெற்ற "பூங்கதவே தாழ் திறவாய்" என்ற பாடல் மூலம் பாடகியாக திரைத்துறையில் அவர் அறிமுகமானார்.

அத்துடன், "பன்னீர் புஷ்பங்கள்", "கேளடி கண்மணி", "ஒரு கைதியின் டயரி", "தென்றலே என்னைத் தொடு," "புதையல்" உள்ளிட்ட பல திரைப்படங்களில் அவர் பாடிய பாடல்கள் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளன.

இந்த நிலையில் பாடகி உமா ரமணனின் இறுதிக் கிரியை நேற்று மாலை சென்னை அடையாரில் இடம்பெற்றது.

# 'மேதகு' திரைப்பட இசையமைப்பாளர் பிரவீன் குமார் 28 வயதில் காலமானார்

'மேதகு', 'ராக்கதன்' உள்ளிட்ட படங்களின் இசையமைப்பாளர் பிரவீன் குமார் உடல்நல பாதிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார். அவருக்கு வயது 28.

2021 ஆம் ஆண்டு கிட்டு இயக்கத்தில் வெளியான படம் 'மேதகு'. லிசி ஆண்டனி, வினோத் சாகர் உள்ளிட்டோர் நடித்த இப்படம் விமர்சன ரீதியாக பாராட்டப்பட்டது. இப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் பிரவீன் குமார். இப்படத்தைத் தொடர்ந்து 'மேதகு 2', 'ராக்கதன்', 'கக்கன்' உள்ளிட்ட படங்களுக்கும் இசையமைத்திருந்தார்.

கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த பிரவீன் குமார், சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் அங்கிருந்து சென்னை ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனைக்கு அண்மையில் மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு தொடர் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இந்தச் சூழலில், நேற்று சிகிச்சை பலனின்றி பிரவீன் குமார் உயிரிழந்தார். பிரவீன் குமாரின் மறைவுக்கு பலரும் சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# இஸ்ரேலுடனான உறவை முறித்துக்கொள்கிறோம்

## கொலம்பிய ஜனாதிபதி அறிவிப்பு



"இஸ்ரேல் நாட்டுடனான உறவை முறித்துக்கொள்கின்றோம்" என கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ அறிவித்துள்ளார்.

தலைநகர் Bogotá வில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர்கள் தின பேரணியில் பங்கேற்ற ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, இனப்படுகொலை செய்யும் அரசுடனான தூதரக ரீதியிலான உறவை முறித்துக் கொள்கின்றோம் என தெரிவித்தார்.

காஸாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நிலைப்பாட்டை அனைத்து நாடுகளும் எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

காஸாவில் இஸ்ரேலின் முற்றுகையை இனப் படுகொலை என விபரிக்கும் பெட்ரோ, முன்னதாக இஸ்ரேலிடம் இருந்து ஆயுதங்கள் கொள்முதல் செய்வதை இரத்து செய்தார்.

காஸாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை நாஸி ஜேர்மனியில் செய்ததுடன் ஒப்பிட்டு அவர் பேசியுள்ளார்.

"இஸ்ரேல் நாட்டுனான இராஜ்ய உறவுகள் முறிக்கப்படுகின்றன, படுகொலை நிகழ்த்தும் அதிபரை அந்நாடு கொண்டிருக்கிறது. பாலஸ்தீனம் இறந்தால் மனிதநேயம் இறக்கும், நாங்கள் அதனை அனுமதிப்பதில்லை," என சர்வதேச தொழிலாளர்கள் தின பேரணியின் போது அவர் கூறியுள்ளார்.

# மேற்கு கரையில் சோதனை: 15 பாலஸ்தீனியர்கள் கைது





மேற்கு கரையின் ஊடாக இஸ்ரேலிய படைகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது 15 பாலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெத்தலேம், ரமல்லா ஆகிய பகுதிகளில் மேற்படி தரப்பினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாலஸ்தீனிய கைதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காசாவிற்கான உதவிகளை இஸ்ரேல் தடுத்துள்ள நிலையில், மீண்டும் அவற்றை வழங்க முயற்சித்தாலும் அங்கு நிலவும் பஞ்சத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் இதுவரை 34 ஆயிரத்து 596 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 77 ஆயிரத்து 816 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் கன மழை தொடர்கின்றது

## பல விமான சேவைகள் ரத்து






ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த ஏப்ரல் மாதம் மத்தியில் கனமழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதித்திருந்தது

இந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு பின்னர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. கனமழையுடன் இடி, மின்னல் ஆகியவையும் ஏற்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் அங்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

அத்துடன், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. குடியிருப்புவாசிகள், வீட்டுக்குள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் பொது துறை மற்றும் தனியார் துறை அலுவலகங்களில் பணிபுரிவோர் வீட்டில் இருந்து பணிபுரியும்படியும் கூறப்பட்டு உள்ளது. இதேபோன்று, மாணவர்களின் பாதுகாப்புக்காக அவர்கள் இணைய வழி கல்வியை பெறவும், அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு விஜயம்














(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்ட இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு விஜயம் மேற்கொண்டு மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வின் நிறைவில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கருத்து தெரிவிக்கையில்–

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கப்பல் சேவை இந்த மாதம் நடுப்பகுதிக்குள் மீள ஆரம்பிக்கப்படும் எனவும், இராமர் பாலம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன எனவும் கருத்து தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளருமாகிய எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் உள்ளிட்ட மாநகர சமையின் உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அரசியல் விவாதப் பேசு பொருளாதல் வேண்டும்

## செம்பசுமை மேதினப் பொதுக்கூட்டத்தில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு




காலநிலை மாற்றம் சகல தொழில் துறைகளையும் மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்து வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவை பற்றி அரசாங்கமோ, அரசியல் கட்சிகளோ சிந்திப்பதாக இல்லை. உழைப்பாளர் தினப் பொதுக் கூட்டங்கள் வெற்று அரசியல் கோசங்களாலேயே நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறவேண்டும். அரசியல் விவாதங்களில் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் முன்னுரிமை பெறவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

பூமி நாளுக்குநாள் சூடேறிக் கொண்டிருக்கிறது. கடந்த 173 ஆண்டு கால வானிலை வரலாற்றில் 2023ஆம் ஆண்டு மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியிருக்கின்றது. பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சிக் காலத்தில் பூமி கொண்டிருந்த வெப்ப நிலையைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவால் மட்டுமே உயரலாம் எனச் சூழல் விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள். பூமியைச் சூடுபடுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடில் பூமியின் வெப்பநிலை வெகுவிரைவில் இந்த எல்லையைக் கடந்துவிடும். மோசமான



பேரழிவுகளை ஏற்படுத்தப்போகும் இந்த வெப்ப உயர்வு இதுவரையில் எந்த அரசியல்வாதியையும் உலுக்கியதாகத் தெரியவில்லை.

நாம் காலநிலை மாற்றத்தின் பாதகங்களை ஏற்கனவே வெப்ப அலைகளாகவும், குறுகிய நாளில் கொட்டித் தீர்க்கும் அடைமழைகளாகவும் அனுபவிக்கத் தொடங்கி விட்டோம். காலநிலை மாற்றத்தால் ஒரு புறம் விவசாயம் பொய்த்துப் போக, இன்னொருபுறம் கடலில் மீன்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இன்று தென்னைகளைத் தாக்கும் வெள்ளை ஈக்களின் படையெடுப்பும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றுதான். ஆனால், இவற்றையெல்லாம் தற்செயலான, தனித்தனியான நிகழ்வுகளாகவே நம்மில் பெரும்பாலானோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் அளவுக்குச் சமூகம் சூழல் சார்ந்து இன்னும் போதிய அறிவூட்டப்படவில்லை.

இந்திய உச்ச நீதிமன்றம் காலநிலை மாற்றங்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் அடிப்படை மனித உரிமை என்று அண்மையில் தெரிவித்திருக்கிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான தமது திட்டங்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ள இலங்கையில் எந்தவொரு வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இன நீதியை முன்வைக்கப் போவதில்லை. சூழல் நீதிக்கேனும் மதிப்பளித்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் காலநிலை மாற்றப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த வாக்குறுதிகளையேனும் இடம்பெறச் செய்வதற்குத் தேர்தல் ஆணையம் ஆவன செய்ய வேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

# உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனின் 17 ஆம் பெருந்தலைவர் பொறுப்பேற்பு








( வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் ஆகியவற்றின் 17ஆவது பெருந்தலைவர் அதி வணக்கத்துக்குரிய சங்ககுரு ஶ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜீ, கொல் கத்தாவில் உள்ள தனது சங்க குரு விற்கான வாசஸ்தலத்திற்கு நேற்று வியாழக்கிழமை எழுந்தருளினார்.

அந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷனின் உயர்பீட சுவாமிகள் முக் கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

அவர் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி பேலூர் மடத்தில் நடைபெற்ற மடத்தின் அறங்காவலர்கள் குழு மற்றும் மிஷனின் நிர்வாகக் குழு கூட்டத்தில் இராமகிருஷ்ண மடம் மற்றும்ஃராம கிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் 17ஆவது தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

இவரது நியமனத்தை அடுத்து இந் திய பிரதமர் மோடி நேரடியாக சென்று அவரை வாழ்த்தியிருந்தார்.

அகில உலக இராமகிருஷ்ண மிஷ னின் 16ஆவது பெருந்தலைவர் அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் கடந்த மாதம் தனது 94 வது வயதில் இயற்கை யெய்தியமையை அடுத்து இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.













# தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் நீதிமன்றத்தை நாடுவதற்கு தீர்மானம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறை சாத்தியமற்றது எனத் தெரிவித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் நீதிமன்றத்தை நாடத் தீர்மானித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் கீழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங்க முடியாதென பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்கினால், தேயிலை தொழிற்றுறை முற்றாக பாதிக்கப்படும் என சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பள அதிகரிப்பு உரத்திற்கு விதிக்கப்பட்ட தடையின் இரண்டாம் பாகமாக அமையும் எனவும், இதனால் ஏற்படுகின்ற தேயிலைத் துறையின் வீழ்ச்சிக்கு இந்த தீர்மனத்தை எடுத்தவர்களே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

25 அல்லது 30 கிலோகிராம் கொழுந்தை பறித்தால் மாத்திரமே சம்பள அதிகரிப்பு ஓரளவேனும் சாத்தியப்படும் என பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

மேலதிகமாக பறிக்கப்படுகின்ற ஒரு கிலோகிராம் கொழுந்திற்கு 40 ரூபாவை செலுத்துவதே கடினமாகியுள்ள நிலையில், 80 ரூபாவை எவ்வாறு வழங்க முடியும் என ரொஷான் இராஜதுரை கேள்வி எழுப்பியுள்ளார்.

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 350 ரூபா விசேட கொடுப்பனவு என்பது என்னவென்பதே தமக்கு தெரியாது எனவும் சம்பள அதிகரிப்பு தீர்மானத்தை நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்கு உட்படுத்த நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை வரவு – செலவுத் திட்ட நிவாரணஜ் கொடுப்பனவை உள்ளடக்கியுள்ளதாகவும், இது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவிற்கும் ஏற்புடையது எனவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய, நாளாந்த மொத்த கொடுப்பனவு 1,700 ரூபா வழங்கப்படும் எனவும் மேலதிக ஒரு கிலோவிற்கு 80 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச தீர்மானம் தொடர்பான ஆட்சேபனைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை சமர்ப்பிக்க முடியும் என தொழில் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதுளை எல்ல பகுதியில் பாரிய மண்சரிவு அபாயம்

மழையுடனான காலப்பகுதியில் பதுளை – எல்ல – கரந்தகொல்ல பகுதியில் எந்தவொரு நேரத்திலும் பாரிய மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எல்ல – கரந்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் உமாஓயா பல்நோக்கு திட்டத்தின் விளைவா, இல்லையா என்பதை கண்டறிவதற்காக தொழில்நுட்ப உபகரணங்களை நிறுவ தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட



சிரேஷ்ட புவியியலாளர்கள் குழுவொன்று, எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளை நேற்று முன்தினம் ஆய்வு செய்தது.

இதேவேளை உமாஓயா பல்நோக்கு திட்டத்தினால் இந்த மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதன்படி கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிறப்புக் குழுவினால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதன் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன கருத்துரைக்கையில், இந்த மண்சரிவு அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்த பகுதிகளில் பொருத்தப்படும் தொழில்நுட்ப கருவிகளின் அடிப்படையில் விஞ்ஞானபூர்வமாக விடயங்களை உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாரதிய ஜனதாக் கட்சியின் கலந்துரையாடலில் பொதுஜன பெரமுனவும் ஐ.தே.கவும் பங்கேற்பு



பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரசாரங்களுக்கு அனுபவங்களையும், ஊக்குவிப்புகளையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேற்று முன்தினம் இந்தியாவில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இலங்கையின் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் பங்கேற்றுள்ளன.

பாரதிய ஜனதா கட்சியின் வெளியுறவுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கலாநிதி விஜய் சௌத்திவாலாவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பாரதிய ஜனதா கட்சியினால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கிணங்க, 10 நாடுகளின் 18 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கட்சித் தலைவர் ஜே. பி. நட்டாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன், இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கரையும் மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஸ்னவையும் அவர்கள் சந்தித்தனர் என பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

அவர்களுக்கு பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரசார உத்திகள் மற்றும் முழுமையான தேர்தல் படிமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அவுஸ்திரேலியாவின் லிபரல் கட்சி, இஸ்ரேலின் லிக்குட் கட்சி, ரஷ்யாவின் யுனைட்டட் ரஷ்யா கட்சி ஆகியவற்றுடன் வியட்நாம், பங்களாதேஷ், உகண்டா, தன்ஸானியா, மொரிஷியஸ், நேபாளம் ஆகிய நாடுகளின் சில கட்சிகளும் கலந்து கொண்டிருந்தன.



# உமாஓயா திட்டத்தினால் தினசரி எட்டுக் கோடி ரூபா சேமிப்பாம்!

உமாஓயா அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 8 கோடி ரூபா சேமிக்கப்படும் என அதன் திட்டப் பணிப்பாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

உமாஓயா திட்டத்தினால் இதுவரை சுமார் 150 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த திட்டம் சுமார் ஒருமாத காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆகியோரின் தலைமையில் இந்தத் திட்டம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

2007 நவம்பர் 27ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 2008 ஏப்ரல் 21ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# நெடுங்கேணி விபத்தில் கார்ச் சாரதிக்குக் காயம்





(கே.வசந்தன்)

வவுனியா நெடுங்கேனி சந்தியில் நேற்றுக் காலை மீன்கள் ஏற்றும் குளிரூட்டப்பட்ட வாகனமும் காரும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரின் சாரதி காயமடைந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சென்ற நெடுங்கேணிப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் இன்று திருத்தம்




லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, லிட்ரோ சமையல் எரிவாயுவின் புதிய விலை குறித்த அறிவிப்பு இன்று காலை வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு விலை கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வவுனியாவில் ரூ.15 லட்சம் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

- கே.வசந்தன் -

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் 15 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கையெள உக்குளாங்குளம் பகுதியில் முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது 50 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிக்குளம் பகுதியினை சேர்ந்த 36வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

கைப்பற்ற போதைப்பொருளின் பெறுமதி கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபா எனவும், கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.



# பரேட் சட்டத்தை இடைநிறுத்தும் சட்டமூலத்துக்கு அரசாங்க நிதி தொடர்பான குழு அனுமதி வழங்கியது



பரேட் சட்டத்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை இடைநிறுத்துவதற்காக நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சில நிபந்தனைகளின் கீழ் அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

கடன் பெறுநர்களால் மீள செலுத்தாமல் தவறவிடப்பட்ட கடன்களை அறவிடும் வகையில் அந்தக் கடனுக்கு பிணைப் பொறுப்பாக வங்கிகள் அல்லது ஏனைய நிதி நிறுவனங்களில் அடகு வைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு பரேட் சட்டம் அனுமதிக்கிறது.

இதன்படி, பரேட் எனப்படும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை இடைநிறுத்தி நாடாளுமன்றில் திருத்தச் சட்டமூலம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் நாடாளுமன்றில் கூடிய போது இந்தச் சட்டமூலத்துக்கு அனுமதியை வழங்கியதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பஸ் கட்டணங்களில் எந்த மாற்றமுமில்லை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு



டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் இம்முறை பஸ் பயணக் கட்டணங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்பட மாட்டாது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழு நேற்று கூடிய போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் வருடாந்த பஸ் பயணக் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில் அதற்கு முன்னர் பஸ் பயணக் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளத் தயாராக இல்லை என தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கங்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.05.2024




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.




நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.




உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.




தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.05.2024




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும்.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்க முடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.






# ஜனாதிபதி தேர்தலை முற்றாகப் புறக்கணிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்து!

(ஹஸ்பர் ஏ.ஹலிம்)

தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முற்று முழுவதுமாக புறக்கணிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டக் கிளையினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டக் கட்சிக் காரியாலயத்தில் நேற்று மாலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கட்சியின் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர் க.குகன் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஸ்ரீபிரசாத் ஆகியோர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தனர்.

தொடர்ந்தும் ஊடகங்களுக்கு அவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

பொது வேட்பாளர் என்பது ரணிலுக்கு இரண்டாவது விருப்பு வாக்கைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு முயற்சியாகும். அதற்கு தமிழ் மக்கள் ஒரு போதும் அடி பணியக்கூடாது.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகள் தொடர்பில் இன்று தமிழ் மக்கள் ஒரு நல்லபிப்பிராயத்தினை கொண்டுள்ளனர். இந் நிலையில் பொது வேட்பாளரையும் புறக்கணித்து, நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலையும் புறக்கணிப்பதன் மூலமாக சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்கள் தெற்கில் இருக்கும் எந்தவொரு தலைவரையும் நம்பத் தயாராக இல்லை எனும் செய்தியை வழங்கமுடியும்.- என இதன் போது தெரிவித்தனர்.

# வாகரையில் நில அபகரிப்பை எதிர்த்து நேற்று வியாழேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம்










(கனகராசா சரவணன்)

"மட்டக்களப்பு வாகரையில் நில அபகரிப்பைத் தடுப்போம்! நிலத்தைக் காப்போம்!!" - என்ற தொனிப் பொருளில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் பெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று வியாழக்கிழமை வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து பிரதேச செயலகம் வரையில் இடம் பெற்றது.

முற்போக்கு தமிழர் கழகக் கட்சி மற்றும் வாகரை பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து வாகரையில் நில அபகரிப்பு மற்றும் இல்மனைற் அகழ்வு போன்றவற்றை நிறுத்த கோரி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தன.

வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் தலைமையில் நூற்றுக் கணக்கான மக்கள் ஒன்று திரண்ட நிலையில் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அங்கு ஒன்றிணைந்த மக்கள் "நில அபகரிப்பை நிறுத்து!", "இல்மனைற் அகழ்வை நிறுத்து!", "இறால் பண்ணை அமைப்பை நிறுத்து!" போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு, கோஷங்கள் எழுப்பியவாறு, அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதேச செயலகம் வரைச் சென்றனர். அங்கு கோஷங்கள் எழுப்பிய பின்னர், உதவி பிரதேச செயலாளரிடம் இராஜாங்க அமைச்சர் மகஜர் ஒன்றை கையளித்தார். பின்னர் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.





# நல்லிணக்கப் பொறிமுறை செயலகத்தினால் மக்கள் கருத்தறியும் பணிகள் முன்னெடுப்பு

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தினால் அனுராதபுரம் மாவட்டத்தில் மக்கள் கருத்தறியும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான நிலையான கட்டமைப்பை தயாரிப்பதற்கான செயன்முறைக்கு பொதுமக்களின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம், அதிகாரிகள், மகா சங்கத்தினர், அனுராதபுரம் மறை மாவட்ட பேராயர் மாஷல் அந்தாதி, அனுராதபுரம் முஸ்லிம் பள்ளிவாசல் மௌலவி அப்துல் கயூம் தலைமையிலான குழுவினர் உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்தனர்.

இவர்களுக்கு மேலதிகமாக, நொச்சியாகம, மஹவிலச்சிய பிரதேசவாசிகள், பிரதேச செயலாளர்கள், கிராம அதிகாரிகள், அனுராதபுரம் மாவட்டச் செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் உள்ளிட்ட குழுவினர், அனுராதபுர சிவில் செயற்பாட்டாளர்கள், பிரதேச முப்படை அதிகாரிகள், அனுராதபுரம் சிரேஷ்ட பொலிச் அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், ஊடகவியாலளர்கள், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் செயலகம் மற்றும் ஜனசபா அலுவலகத்தின் அதிகாரிகள், மதவாச்சி பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தவர்கள், எலவக, மஹகொன்கஸ்கட பிரதேசவாசிகள், கெபதிகால்லாவ மற்றும் ஹொரவ்வொத்தானை பிரதேச செயலக பிரிவினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது வடக்கு கிழக்கில் ஏற்பட்ட மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், அதனால் ஏற்பட்ட பயங்கரமான அனுபவங்கள், எதிர்காலத்தில் அவ்வாறு நடப்பதை தடுப்பதற்கான அவசியம் உள்ளிட்ட நோக்கங்களை அடைவதற்கான சுயாதீன அலுவலகம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

உத்தேச ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்ட நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான அதிகாரங்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் முன்னர் சமாதானத்திற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து, உத்தேச சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு வேறுபட போகின்றன என்பது தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறான யுத்த சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ள 26 நாடுகளில் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் போருக்குப் பின்னர் நிலைமாறுகால நீதியின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கான இடைக்கால செயலகம் 12 நடைமுறையில் இருப்பதோடு நிகழ்வுகள் தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்து வருகின்றது.

அந்த நாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் நமக்கான வழிகாட்டுதல்களை அமைப்பதன் முக்கியத்துவம், உத்தேச ஆணைக்குழுவின் உள்ளடக்கத்திற்கு அமைய, பணிப்பாளர்கள் மற்றும் செயலகத்திற்கு மேலதிகமாக, உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் உள்ளடங்கிய ஆலோசனைக் குழு ஆகியவற்றை இந்தச் செயலகம் உள்ளடக்கியிருக்கும் என்பதோடு, பொறுப்புக்கூறலை அடிப்படையாக கொண்டதாக அமையப்பபோகும் இந்தச் செயலகத்தின் சுயாதீனத் தன்மை குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

அதற்கமைய, நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக் குழுவை ஸ்தாபிக்க அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள், அதனை அமைப்பதற்கான பணிகளின் உண்மைத் தன்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் வகிபாகம், 2024 ஜனவரி 01 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டத்தின் முக்கியமான விடயங்கள் மற்றும் உத்தேச சட்டம் மற்றும் பொறிமுறையின் முக்கிய அம்சங்கள் தொடர்பிலான பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் கருத்துக்களை அறிதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.













